BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN 2703-8785




ஓவியம்: *fathima minha, Batticaloa*

*வணக்கம்!*

*சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி, மின்சாரத் துண்டிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகள் மக்களின் வாழ்நிலையை மிகவும் பாதித்துள்ளது. இதனால் போராட்ட களத்தில் இறங்கியுள்ள மக்கள் ஆளும் அரசுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். பெரும்பான்மை சிங்கள மக்கள் தெருவில் இறங்கி வித்தியாசமான கோணங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தி ஆளும் கட்சியை வெளியேற்ற போராடி வருகின்றனர். பல மாதங்களாகியும் ஆளும் குடும்பம் காதுகேளாதோர் போலும், நித்திரை கொள்வது போலும் பாவனை செய்துகொண்டு வருகின்றனர். மக்களின் எழுச்சிகரமான ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் நிகழ்ந்துள்ளன. அவ்விடத்தில் ஒரு இளைஞன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவமும் மக்கள் மத்தியில் பெரும் சோகத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சிறிலங்காவின் அரசியல் நிலைமை எவ்வாறு அமையும்?, நாட்டு மக்கள் சந்தித்திருக்கும் பொருளாதார நெருக்கடி எப்போ தீரும்? போன்ற கேள்விகள் நாட்டு மக்களை நெருடி வருகிறது.*

*சிறிலங்காவில் இரு மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆர்ப்பாட்ட களத்தில் சிங்களவின மக்களே அதிகம் இறங்கியுள்ளனர். தமிழின மக்கள் எங்கே? அப்போ நாட்டில் சூழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடிகளால் தமிழின மக்கள் பாதிக்கப்படவில்லையா? எதற்காக தமிழ் மக்கள் அரசுக்கெதிரான போராட்டத்தில் இறங்கவில்லை? இப்போராட்டத்திற்கும், தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது போலும், வெறும் பார்வையாளர்களாகவும் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதற்கான காரணிகள் எதுவாய் இருக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் நோக்கி வருகின்றனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் அனைத்தையுமே தமிழின மக்கள் பலபத்து ஆண்டுகளுக்கு முன்னரே சிங்கள அரசுக்கு எதிராக நிகழ்த்தி அடி வாங்கி களைத்து விட்டார்கள். இறுதியில் கனரக ஆயுதங்களை ஏந்தி மகாயுத்தம் நடத்தி, ரத்தம் சிந்தி, பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் பலி கொடுத்துவிட்டார்கள். அக்காலப் பகுதிகளில் தமிழின மக்களை இதே சிங்கள அரசு அனைத்து வழிகளிலும் தாக்கி வந்தனர். அவர்களது அனைத்து நெருக்கடிகளையும் எதிர்கொண்டு, எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அம்மக்களுக்கு தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், மின்வெட்டு ஒன்றும் பெரும் தாக்கமேயில்லை. மீன்குஞ்சுக்கு நீந்தப் பழக்கவா வேண்டும் என்பதுபோல் மிக இலகுவாக தமது பாதையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிங்கள அரசுக்கு எதிரான போராட்டத்தில் வீதியில் இறங்கி நிற்கும் சிங்கள மக்களுடன் தமிழர்களும் விரைவில் இணைந்து கொள்வார்களா? அவ்வாறாயின் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர்கள் தமது அடிப்படை உரிமைகளை பெறுவதற்கான திட்டங்கள் ஏதும் முன் வைப்பார்களா? இவற்றுக்காகவேனும் ஈழத் தமிழர்களது அரசியல் கட்சிகள் தமக்குள்ளே இணைந்து கொள்வார்களா? என்பது மக்கள் முன் கிடக்கும் கேள்விகளாகும்.*

*Ansvarlig redaktør: Julius Antoni*
*ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674*

## முகப்போவியக் கவிதை

–மின்ஹா–



கடல் அரிக்க மறுத்திருந்த தீவை
துண்டங்களாய்ப்
பங்கிட்டு புசித்தனர்

இருளுக்கு மேல் இருள் ஊற்றி
நிரப்பி நிரப்பி
உலவும் வெண்மேகங்களும்
கருத்துவிட்டன

ஒளிர்ந்துவிடுமென காத்திருந்த
கனவுக்குமிழ்களின் நூலிழை அறுந்து
ஒளியை மறக்கிறது

போராடிப்போராடி தேசத்தில்
கடலாக இரைகிறது
போ எனும் ஏவல் வார்த்தை


அனலெனக் கொதிக்கிறது
எரிபொருள் நெடும்வரிசை
தீப்பற்றிவிடும் மனக்குமுறலால்
வகைவகையாகக் கற்கின்றது இன்மை

ஏற்றியிருந்த கொடியின்
பிரிகோடுகள் நியதிகளிலிருந்து
கட்டுடைந்து
சிவப்பு செம்மஞ்சள் பச்சை நிறங்களில்
வாளேந்திய சிங்கத்தை வரைகின்றன

அன்னையின் ஆட்சி ஆரத்தை
திருடி விற்ற சால்வைகளை
பீடங்களிலிருந்து இறங்கக்
கோருகின்றனர்
அதிருப்தியின் உச்சத்தில்
கோஷமிடுகின்றனர் அவ்வார்த்தையை









இனியும் போதும்
அளித்த வாக்கிற்கு
அதிகாரத்தால் தந்த ரணங்கள்

பறந்துவந்து கைகளில் நெல்கொறிக்கும்
வெண்புறாக்கள் நெடுங்காலமாக
அவர்களின் சதியால் வசப்படவில்லை
இப்போது
கட்டவிழ்ந்து கைகளில் தவழ்கின்றன
ஐக்கியத்தின் தடவலில்
கண்டடைந்த ஆறுதலாகத்
தேற்றிக்கொள்கிறோம்
சென்றுவாருங்கள். □

# இலங்கை நிலவரம்

-ப்ரியமதா பயஸ்-




இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் போராட்டம் வலுத்துவரும் சூழலில் பல அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர். அவர்களின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச, எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இலங்கையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்த தேசிய அரசை அமைக்க விரும்புவதாகவும், அமைச்சரவை பொறுப்புகளை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் இலங்கை அமைச்சரவை கூண்டோடு இராஜினாமா செய்ததன் எதிரொலியாக இலங்கை பங்குச்சந்தை வர்த்தகம் நிறுத்தப்பட்டது. மக்கள் காலிமுகத் திடலில் முகாமிட்டு "Go Home Gota" என்ற மகுடத்துடன் ஜனாதிபதியும் அவரின் அமைச்சர்களும் வீட்டுக்குப் போகும்வரை போராட்டம் தொடரும் என அறிவித்து, தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை அந்நியச் செலாவணி தட்டுப்பாடு மற்றும் கடும் பொருளாதாரச் சிக்கலில் சிக்கித் தவியாய் தவிக்கிறது. ஆனால் உலக நாடுகள் கண்டும் காணாமல் இருக்கின்றன. அரசனை நம்பி புருசனைக் கை விட்டதுபோன்ற நிலைமையை இலங்கை இப்போது அனுபவிக்கிறது.
உணவுப் பொருட்கள், எரிவாயு, பால்மா, எரிபொருளுக்கு மக்கள் திண்டாடுகின்றனர்.
மின்சாரம் ஒருநாளில் அரைவாசி நேரத்துக்குத் துண்டிக்கப்பட்டுள்ளது. மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் மாதத்தின் ஆரம்ப நாட்களில் இரவு அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டது.

இதைக் கண்டித்து ஜனாதிபதியின் வீட்டை பொதுமக்கள் முற்றுகையிட்டு நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலீஸ் வாகனங்கள் கொளுத்தப்பட்டன. 5 பொலீஸார் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் 36மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த ஊரடங்கு மூன்று நாட்கள் நீடித்து, மூன்றாம் நாள் அதிகாலை 6மணியுடன் முடிவுக்கு வந்தது.

போராட்டம் பரவுவதைத் தடுக்க, பேஸ்புக், ட்விட்டர், வாட்ஸ்-அப் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டன. ஆனால் அதனால் எந்தப் பயனும் இல்லாத நிலையில் அவை மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தன. "GoHomeRajapaksas" - "GotaGoHome" ஆகிய ஹேஷ்டேகுகள் கடந்த சில நாட்களாகவே இலங்கையில் ட்ரெண்டாகி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.




நெருக்கடியான சூழலில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு இந்தியா 40,000 டன்கள் டீசல் வழங்கியது. அரிசி, மருந்துப் பொருட்களையும் வழங்க ஒப்பந்தம் செய்துள்ளது. 40ஆயிரம் டன்கள் அரிசியையும் அனுப்ப இந்தியா நடவடிக்கை எடுத்தது. கடந்த மாதம் இரு நாடுகளும் 1 பில்லியன் டொலர்கள் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் தொடர்ச்சியாக பொருளாக உதவி அனுப்பவும் இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் இருமடங்காக உயர்ந்துள்ள பொருட்களின் விலையை இலங்கை அரசு குறைக்க முடியும் என்றும் நம்பப்படுகிறது .

ஆனால் இன்றுவரை பொருட்களின் விலை குறைந்தபாடில்லை. இம்மாதம் 18ஆம் திகதி மேலும் 35 ரூபாவால் எரிபொருள் விலை உயர்ந்தது.

நிலைமை இப்படி இருக்க ஏப்ரல் 18ஆம் திகதி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச புதிய அமைச்சரவையை நிறுவினார். அதில் - 21 புதிய இராஜாங்க அமைச்சர்களின் பதவிப் பிரமாணம் முன்னெடுக்கப்பட்டது.

* G.L பீரிஸ் - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.
* ரோஹன திசாநாயக்க - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர்.
* அருந்திக்க பெர்னாண்டோ - பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.
* லொஹான் ரத்வக்க - நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அமைச்சர்.
* தாரக பாலசூரிய - வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்.
* இந்திக அனுருத்த - வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்.
* சனத் நிஸாந்த - நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்.
* சிறிபால கமலத் - மகாவெலி இராஜாங்க அமைச்சர்.
* அனுராத ஜயரத்ன - நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்.
* சிசிர ஜயகொடி - சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்.
* பிரசன்ன ரணவீர - கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.
* டீ.வி.சானக்க - சுற்றாடல் மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்.
* டீ.பி.ஹேரத் - கால்நடைவள இராஜாங்க அமைச்சர்.
* காதர் மஸ்தான் - கிராமிய பொருளாதார பயிர்செய்கை மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.
* அசோக பிரியந்த - வர்த்தக இராஜாங்க அமைச்சர்.
* அரவிந்த்குமார் - தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்.
* கீதா குமாரசிங்க - கலாசார இராஜாங்க அமைச்சர்.
* குணபால ரத்னசேகர - கூட்டுறவு சேவை விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.
* கபில நுவன் அதுகோரல - சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.
* கயாஸான் நவனந்த - சுகாதார இராஜாங்க அமைச்சர்.

* சுரேன் ராகவன் - கல்வி சேவை மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டுள்ளனர்.

இது அரசியலில் இன்னும் நெருக்கடி நிலைமையை தோற்றுவித்துள்ளது. ஜனாதிபதி உள்ளிட்டோரை வீட்டுக்கு போகும்படி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது ஜனாதிபதி தனது அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி மக்களை பகடை காய்களாக செயற்படுத்துவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அமைச்சரவை நியமத்தை பின் இரவு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி - இலங்கையின் வரலாற்றில் மிகவும் கடினமான அதே போன்று, சவாலான பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக நாடு தீர்மானமிக்கதொரு தருணத்தை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்திலேயே இன்று நான் உங்களிடம் உரையாற்றுகிறேன்.

நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதையே நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். மேலும், உங்கள் கீழ் உள்ள நிறுவனங்களை ஊழலற்ற, மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிப்புடன் செயற்படும் நிறுவனங்களாக மாற்றுங்கள். பல அரச நிறுவனங்கள் இன்று கடும் நிதி நெருக்கடியில் உள்ளன.

அவை சரி செய்யப்படுவது மிகவும் அவசியம். நீங்கள் செய்ய வேண்டிய முக்கிய பணிகளில் இதுவும் ஒன்றாகும். இந்த அமைச்சுப் பதவிகள் கிடைத்தவுடன், தமக்குக் கிடைக்கும் அமைச்சுக்களிலும் நிறுவனங்களிலும் தொழில் வழங்குவதற்குத் தயாராகி வருவதை நாம் அறிவோம்.

மக்கள் கோரிய முறைமையை (System Change) மாற்ற இன்றைய நெருக்கடி ஒரு நல்ல சந்தர்ப்பம். உங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதே நேரத்தில், இந்த இளைஞர்களிடம் அதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
கடந்த இரண்டரை வருடங்களாக நாங்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளோம். கொவிட் தொற்றுநோய் அதேபோன்று கடன் சுமை போன்ற விடயங்கள். அவ்வாறிருந்தாலும் எங்களாலும் பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. அவை சரி செய்யப்பட வேண்டும். அவற்றை சரி செய்து கொண்டே நாம் முன்னேற வேண்டும். மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். அதைவிட இந்த பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல சிக்கல்களால் இன்று மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாத மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற வரிசையில் நின்று நேரத்தைச் செலவழிப்பதால் ஏற்படும் வேதனையும், அசௌகரியமும், கோபமும் மிகவும் நியாயமானது.
கடந்த காலத்தில் என்ன குறைகள் ஏற்பட்டு இருந்தாலும், தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான எனது பொறுப்பாகும்.

எந்த சிரமத்திற்கும் சவாலுக்கும் மத்தியிலும் அந்தப் பொறுப்பில் இருந்து விலக மாட்டேன் என்று என்னை நியமித்த மக்களிடம் உறுதியளிக்கிறேன்.

தற்போது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளில் நாம் முன்னுரிமை வழங்க வேண்டியது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கே ஆகும். அதைத் தீர்க்காமல் வேறு எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது.
எனவே, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நான் ஏற்கனவே பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளேன்.
அதன் அடிப்படையான மற்றும் முக்கியமான நடவடிக்கைகளாக புதிய நிதியமைச்சர் ஒருவர், நீண்டகால அனுபவமுள்ள மத்திய வங்கியின் புதிய ஆளுநர் மற்றும் திறைசேரியின் புதிய செயலாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்கத்திற்கும் எனக்கும் ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச அனுபவமும் பொருளாதார முகாமைத்துவத் துறையில் உயர் அங்கீகாரமும் கொண்ட மூன்று பொருளாதார நிபுணர்களை நியமித்துள்ளேன். மேலும், அரசுக்கு உதவுவதற்காக பொது மற்றும் தனியார் துறை நிபுணர்கள் அடங்கிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த கருத்துக்களை மக்கள் நிராகரித்து கோ'ங்களை எழுப்பி ஜனாதிபதி வீட்டுக்கு போகும்வரை போராட்டம் தொடரும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். □

# கடவுளும் கைவிட்ட தேசம்

-எ.ஜெனாத்-

அவள் ஈரவிறகை பற்றவைக்கும்
வித்தை தெரிந்தவள்
"காஸ்" தட்டுப்பாடு பற்றிய
கவலை அவளுக்கில்லை!

இன்றைக்கு இல்லாவிட்டாலும்
நாளைக்கோ மறுதினமோ
குடும்பத்தோடு அவள்
பட்டினியால் சாவதற்கு
அதிக வாய்பிருக்கிறது!

"டாலர் மதிப்பேற்றம்"
"திவாலாகும் இலங்கை"
"ரஷ்யா உக்ரைன் யுத்தம்"
இவற்றையெல்லாம் சிந்திக்க
வயிறும் பசியும் அவளுக்கு
நேரம் கொடுக்கவில்லை

காணாமலாக்கப்பட்ட கணவனுக்காக
நடுவீதியில் வெயிலில் அமர்ந்து
அவள் கருகிப்போனதும்
புகைப்படம் வெளுத்துப் போனதுமே
மிச்சம்!

தங்கத்தின் விலையோடு
கல்யாணமாகாத
இரண்டு பொட்டச்சிகளின் வயதும்
ஏறிக்கொண்டிருக்கிறது!

தற்கொலை செய்து கொள்ளும்
எண்ணம் வராதிருக்க
"விடிந்தால் எல்லாம் சரியாகிவிடும்"
என்ற மந்திரத்தை இரவில் ஓதுமாறு
பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறாள்!

உணவுப் பஞ்சத்தை சமாளிக்க
மக்களை பொறுப்புடன் நடந்து கொள்ளும்படி
கேட்டுக் கொண்ட தலைவர்களின் கருத்திற்கு
உச்ச மதிப்பளித்து
இன்றிரவும் அவள்
பட்டினியோடு பாய் விரிக்கிறாள்
"விடிந்தால் எல்லாம் சரியாகிவிடும்"

## கடவுளும் கைகளும்

-கருணாகரன்-

எதிர்ப்பட்டபோது கேட்டாள்
"உன்னுடைய மற்றக் கை எங்கே?"
"அதைக் கடவுள் எடுத்துச் சென்று விட்டார்
கடவுளுக்கு அதைக் கொடுத்து விட்டேன்
கடவுள் பறித்து விட்டார்...
நீங்கள் எப்படியாவது
எடுத்துக் கொள்ளலாம்" என்றேன்.

அன்றிரவு வீசப்பட்ட
விமானக் குண்டு வீச்சில்
"மூன்று குழந்தைகள் பலியாகினர்"
"மூன்று குழந்தைகள்
கொல்லப்பட்டனர்"
"மூன்று குழந்தைகள் இறந்தனர்"

அவரவர் தமக்கேற்ற விதமாய்
வியாக்கியானம் செய்தனர்.

"அதொரு துர்க்குறி" என்றார் பாட்டி.
மறுநாள் வீசப்பட்ட எறிகணை வீச்சில்
கடவுளின்
இரண்டு கைகள் துண்டிக்கப்பட்டன
இரண்டு கைகளையும் இழந்தார் கடவுள்
கடவுளின்
இரண்டு கைகளும் பறிக்கப்பட்டன
கடவுளுடைய
இரண்டு கைகளும் பறிபோயின.

இதையும் அவரவர் தமக்கேற்ப
வியாக்கியானப்படுத்திக் கொள்ளலாம்.
மூன்று குழந்தைகள் கொல்லப்பட்ட
(பலியாகிய) இறந்த
அந்தத் துர்க்குறியைக் குறித்து
கடவுள் என்ன கருதியிருப்பார்?
மேலும்
இழந்த தன்னுடைய
கைகளைக் குறித்தும்?

(உக்ரேனில் போரில் சிக்கியுள்ள குழந்தைகளுக்காக)




சிவா முருகுப்பிள்ளை

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபது, எழுபது, எண்பதுகளில் எம்மவருக்கு இந்தியா என்பது, சிறப்பாக தமிழ் நாடு என்பது ஒரு இந்திர உலகம் போல் கற்பனையில் விரிந்திருந்தது. அதற்குக் காரணம் அங்கிருந்து வரும் ஆனந்தவிகடன், குமுதம், கலைமகள், கல்கி போன்ற சஞ்சிககைகளும், சினிமாவைப் பற்றி தாங்கி வரும் சினி இதழ்களுமாகும்.

இதற்கு சிகரம் வைப்பது போல் எம்மூர் திரையரங்குகளில் திரையிடப்பட்ட திரைப் படங்களில் வரும் காட்சிளும் காரணமாக இருந்தன.
இவை எல்லாம் எமது மொழியை, கலாச்சாராத்தை, பண்பியலை ஒத்தவையாக இருந்தபடியால் அதிகம் ஈர்ப்புடன் தொப்புள் கொடி உறவாகவும் உணரப்பட்ட நிலமைகள் அதிகம் எமக்குள் இருந்தன.

கூடவே திராவிட இயக்கங்களின் அடுக்கு மொழிப் பேச்சுகளும், இதற்குள் இருக்கும் கருத்தியலும், அங்குள்ள கோவில்கள் பற்றிய விபரணங்களும், இந்தியாவில் மேற்படிப்புக் கல்வி கற்கச் சென்று திரும்புபவர்களின் வாய்ப் பேச்சும், அனுபவங்களும் காரணங்களாவும் இருந்தன.

ஒரு முறையாவது தமிழ் நாடு சென்று வரவேண்டும் என்ற ஆவல் பலருக்கும் இருந்திருக்கின்றது. அது திருத்தல யாத்திரையாக இடங்களைப் பார்த்தல் என்பதாக அமைய வேண்டும் என்றிருந்தாலும் அதற்கான வாய்ப்புகள் அப்போது அனேக மக்களுக்கு இலகுவில் கிடைத்திருக்கவில்லை.

இத்தனைக்கும் கொழும்பு வழியிற்கு அப்பால் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் இருந்து திருச்சிக்கு நேர-டியான விமானப் போக்குவரத்துகள் நடைபெற்றதும், தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான கடற் பணயம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டங்கள் அவை.

இந்தக் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த நாட்களில் வாய்ப்புகள் ஏற்பட்ட போது இந்தியாவின் தமிழ் நாட்டிற்கு சென்றால் அவர்கள் எங்களிடம கேட்பது சோப்பு கொண்டு வந்திருக்கின்றீர்களா...? என்பதே.

இதனுடன் எண்பதுகளில் “மான்டியா” (Mondia watch) கொண்டு வந்திருக்கின்றீர்களா...? என்பதும் இணைந்து கொண்டது.
இவற்றை அறிந்திருந்த எம்மவர்கள் இங்கிருந்து தமிழ்நாடு தலயாத்திரைகளுக்குப் போகும் போது அங்கு இவற்றைக் கொண்டு சென்று விற்றுவிட்டு கிப்ஸ் சாரமும், பட்டுப் புடவைகளையும் பதிலாக வாங்கிக் கொண்டு திருத்தல யாத்திரையுடன் பல வகை தோசைகளும், இட்லியும், பூரியும், உப்புமாவும் அவர்களின் அசலான சாம்பாரும் சாப்பிட்டு விட்டு வந்தார்கள்.
கூடவே சில்வர் பாத்திரங்கள் ஒரு செற் வாங்கி வரவும் மறக்கவில்லை. இத்துடன் பழனி பஞ்சாமிர்தமும் முடிந்தால் திருப்பதி லட்டும்.

இதற்கு காரணம் இருந்தது இந்தியா சுய சார்பு பொருளாதார கொள்கையின் அடிப்படையில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்கிவிக்கும் வகையில் இந்த இறக்குமதி சோப்புகளையும் கை கடிகாரங்களையும் மட்டுப்படுத்தி உள்ளூரில் உற்பத்திகளை ஊக்குவித்தபடியால் உலகத்தரம்(?) வாய்ந்த பொருட்களை அவர்களால் இந்தியாவில் அன்று பெற முடியவில்லை.

உண்மையில் கைக் கடிகாரங்களும் சிறப்பாக சோப் அதுவும் உடுப்புத் துவைப்பதற்காகப் பாவிக்கப்படும் சோப்புகள் மிகவும் தரம் குறைவாக அதிகம் நுரைக்காதவையாகக் காணப்படும். குளிப்பதற்கு பாவிப்பவை நம்மூரில்

*அதிகம் பாவிகப்படும் லக்ஸ், ராணி சோப் மாதிரி அதிக நுரை தருபவையாகவோ, நறுமணம் தருபவையாகவோ இருக்கவில்லை. இதனால் நம்மூர் இந்தப் பொருட்களுக்கு அங்கு அதிகம் கிராக்கி இருந்து. குளிர்பானங்களும் அவ்வாறே.... உள்ளூர்த் தயாரிப்புகளை அதிகம் பாவித்தனர். இறக்குமதிப் பானங்களை அதிகம் கடைகளில் காணமுடியாது.*

*(யுத்தம் உச்சநிலையை அடைந்தத 83களின் பின்பு அகதிகளாக சென்றவர்கள் இவற்றின் தாக்கங்களை அதிகம் அறிந்திருக்க வாய்ப்புகள் குறைவு. காரணம் மாற்றங்கள் அங்கும் எற்படத் தொடங்கிவிட்டன. ஆனாலும் சிலவற்றை காணக் கூடியதாக இருந்திருக்கும்.)*
*அதன் வளர்ச்சி இன்று அதிக தரம் வாய்ந்த தமக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் சிறிய பெரிய இயந்திரங்கள் தொழில் முனைவோர் உற்பத்திகள் பொருட்கள் என்று பலவாறு அவர்கள் முன்னேற்றம் அடைந்து விட்டார்கள்.*

*இதற்கு அப்பாலேயே அவர்களின் பொருட்களின் இறக்குமதிகள் என்று இருக்கும் நிலை இன்றும் காணப்படுகின்றது. மாறாக நாம் உள்ளூரில் தரமாக உயர்ந்து சென்ற மில்க் வைற் சோப்பும், முல்லைச் சோப்பும் சர்வதேச சோப்புகளுடன் போட்டி போட முடியாமல் மூடுவிழா... செய்வதற்கு ஆக்கிவிட்டோம் நமது தாராளவாத இறக்குமதிக் கொள்கைகளினால்.*

*கூடவே இந்த சமகாலத்தில் ஏனைய சோப்புகள் சந்தையில் இன்னொரு அரசியலையும் செய்து கொண்டிருந்தன. மில்க்வைற்றும், முல்லை சோப்பும் பாவிப்பவர்கள் வறியவர்கள், பொருளாதார ரீதியில் நலிந்தவர்கள் என்பதற்கூடாக ஒரு சாதியக் கட்டுமானத்திற்குள் இதனையும் தள்ளிவிட்டார்கள்.*

*இன்று நாம் எமது சோப்பு தேவைக்குக்கூட பிறரின் கைகளை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட உள்ளூர் உற்பத்திகள் இன்றி தவிக்கின்றோம். காலி முகத்திடலில் பல நாட்களாக போராடவும் செய்கின்றோம்.*

*இந்த திறந்து விடும் பொருளாதாரத்தின் தந்தையின் வழித்தோன்றல்கள் கண்டியில் இருந்து பாதயாத்திரை ஆரம்பித்து 1977களில் எந்தத் தொழிற் சங்கங்களின் முதுகெலும்புகளை சுக்குநூறாக உடைத்து தொழிலாள வர்க்கத்தின் குரல்வளையை நெரித்தார்களோ, அதனை இலாவகமாக மறைத்து தற்போது ஆயிரம் தொழிற்சங்கங்களை இணைந்து வேலை நிறுத்தம் என்று போராட்டத்திற்கு பலம் சேர்த்திருக்கின்றார்கள்.*

*மக்களே வரலாற்றை திரும்பிப்பாருங்கள்....!*
*மறக்கப்படக் கூடாத வரலாறு அது.*
*இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் மேற் கூறிய உள்ளூர் உற்பத்திகள் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தன என்ற வாதத்தை முழுமையாக மறுக்காவிட்டாலும், அது ஒரு சமூக மாற்றமாக இல்லாது தட்டுப்பாட்டை சமாளிக்கும் துப்பாக்கி அதிகாரத்தினால் நடைபெற்ற படியால்தான் இன்று யுத்தம் முடிவுற்று பல ஆண்டுகள் ஆகியும் தமிழ்ப் பிரதேசங்களில்கூட இதன் தொடர்ச்சியான செயற்பாட்டை, முன்னெடுப்பைக் காண முடியவில்லை.*

*கூடவே கந்தளாய் சீனியும், வாழைச்சேனைக் காகிதமும், கிழக்கு எங்கும் பரவி இருந்த குடிசைக்(விறாந்தை) கைத்தொழில் நெசவும் என்றிருந்த கிழக்கு மாகாணமும் எந்த உற்பத்தியும் இன்றி நகர்ந்து கொண்டிருக்கின்றது. சந்திக்கு சந்தி கண்ணாடி போட்ட கொத்து ரொட்டி கடைகள், இனிப்புப் பான கடைகள் மட்டும் அபிவிருத்தி அல்ல. இவை தவிர்த்து எந்த உற்பத்திகளும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.*

*கால் நடை வளர்ப்பா அது என்ன...? என்பதைக் கேள்விகளாகக் கேட்கும் நிலமைகளே பெரும் மேய்ச்சல் நிலங்களைக் கொண்ட கிழக்கு, வன்னி மாவட்டங்களில் அதிகம் காண முடிகின்றது.*

*ஓரளவிற்கு விவசாயம் சம்மந்தப்பட்ட முன் முயற்சிகள் எடுக்கப்பட்ட அளவிற்கு இவற்றில் அதிகம் நாம் முன்னோக்கி நகரவில்லை.*
*இதற்கான அரசியல் காரணங்கள் இருந்தாலும் அடிவளவிற்குள் "எலுமிச்சை" நடும் அளவிற்கான சிறு குறு தொழில் முயற்சிகள் மில்க்வைற் சோப் அளவிற்கேனும் நடைபெறவில்லை என்பதை, நாம் எம்மிடம் சோப் இருக்கா...? மாண்டியா இருக்கா...? என்பதை தமிழ் நாட்டு மக்கள் காலத்துடன் ஒப்பிட்டு இதிலிருந்து எவ்வாறு எழுந்துவர முடியும் என்பதை கட்டமைக்க வேண்டும்.*

*சோப்பிற்கும், சீப்பிற்கும், கண்டாடியிற்கும் சீனாவின், இந்தியாவின் கப்பலை எதிர்பார்த்திருக்கும் எமது பொருளாதாரம் இறக்குமதிக்கான அந்நிய செலவாணி இல்லாமல் தவிப்பது ஏன் என்று புரிகின்றதுதானே.*

*இதற்குள் எமது பசுக்களை கைவிட்டு நியூசிலாந்து பால்மா பக்கெற்று வாழ்கைக்கு நாம் சென்றதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.*
*இவற்றை மாற்றியமைப்பதற்கான அரசு ஒன்றை அமைக்க தற்போதைய அரசு வீட்டிற்கு போகத்தான் வேண்டும் அதற்காக எதிர் வரிசையில் உள்ளவர்கள் மட்டும் இதற்கான தீர்வுகளை செயற்பாடுகளை சிந்தனையைக் கொண்டவர்கள் என்று கூறமுடியாது. அவர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.* □

# இலங்கையில் பெண் தலைமை குடும்பங்களின் வாழ்வியல்

பாகம் - 7

-ப்ரியமதா பயஸ்-



இலங்கையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான விதவைகள் தொழில் வாய்ப்பின்மை, பாதுகாப்பின்மை, வறுமை, வன்முறைக்குள்ளாதல், பொருளாதாரச் சிக்கல், மோசமான சமூகப்பார்வை, அவர்களுக்கு குழந்தை இருந்தால் கல்வி, போசாக்கு, சுகாதாரம் போன்ற விடயங்களில் பொருளாதாரப் பிரச்சினையால் கவனிக்க முடியாமை, உறவினர் மற்றும் பிறரின் உதவிகளை பல விடயங்களுக்கு நாடவேண்டிய சூழல் என சவால்கள் நிறைந்த வாழ்க்கையை வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மரணம் வரை கண்கலங்கி சமூதாயபார்வையால் அடக்கி, ஒதுக்கப்படுபவர்களாகவும் இன்னொருவரின் கையை எதிர்பார்த்து இருப்பதையும்தான் முழு நாட்டிலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிகவும் பாதித்திருப்பது இந்த பெண்தலைமைக் குடும்பங்களைத்தான்.

எப்போதுமே அடுத்தவர் கையை நம்பி இருக்கும் நிலைமையில் இருக்கும் இவர்களுக்கு ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதார நெருக்கடி மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட கிழக்கின் பெண்தலைமைக் குடும்பங்கள் தமது ஒரு நாள் வாழ்வை கழிப்பதை வறுமை சவாலுக்குற்படுத்துகின்றது. இதனால் தம் வறுமையை போக்கும் ஒரு நம்பிக்கைளோடு புறப்பட்டு நுன்நிதி நிறுவனங்களிடம் அகப்பட்டுக்கொள்கின்றனர். இவ் நிதி நிறுவனங்கள் அவர்களின் உழைப்பையும் உடலையும் சுரண்டி உயிர்பறிக்கும் நிலைவரை கொண்டுசென்றுவிடுகின்றனர். காலத்திற்கு காலம் அரசியல்வாதிகளோ தேர்தல் அரசியலுக்காக அவர்களிடம் தேடிச்சென்று நிறைவேறா வாக்குறுதிகள் மூலம் அவர்களது வாக்குரிமையை தன்வசப்படுத்துகின்றனர்.

வட கிழக்கின் பெண்தலைமைக் குடும்பங்களின் வாழ்க்கை முன்னேற்றத்தை முதலில் அந்தந்த சமூகமே பொறுப்பெடுத்து கட்டமைக்க வேண்டும். அவர்களது சகோதரங்கள் மற்றும் உறவினர்கள் அவர்களுக்கு எப்போதும் நம்பிக்கையளிப்பவர்களாக மாறவேண்டும்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் தம் எல்லைக்குள் உள்ள பெண்தலைமைக் குடும்பங்களின் எண்ணிக்கையை மாதாந்தம் சரிபார்ப்பதோடு அவர்களுக்கான வாழ்வாதார முன்னேற்றத்திற்கான புத்தாக்கத் திட்டங்களை தயாரித்து அவற்கை அன்றாடம் அவதானித்து முன்னேற்ற அறிக்கை மூலம் பகுப்பாய்வு செய்து வீழ்ச்சியை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கும் நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

விசேடமாக பெண்தலைமைக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான கல்வி மற்றும் சுகாதாரம் போக்குவரத்து போன்ற துறைகளில் விசேட சலுகைகளை வழங்கும்

திட்டத்தை தேசிய கொள்கையாக மாற்ற அரசியல் ஒன்றிணைவதோடு பெண்தலைமைக் குடும்பங்களுக்கான விசேட சமூகப்பாதுகாப்புத் திட்டங்களும் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறான முற்போக்கான திட்டங்களை நாடளாவிய ரீதியில் கருத்துக்கேட்டு அவற்றை தேசிய கொள்கையாக மாற்ற அரசாங்கம் முன்னவரவேண்டும்.

அப்போதுதான் நாட்டில் எவ்வகை நெருக்கடிகள் ஏற்படினும் இத்தகையவர்களின் வாழ்வியலை பட்டினி அற்ற நிலைமையில் தக்கவைத்து கொள்ளமுடியும் .

தற்போதைய நிலையில் வீதிக்கும் வர முடியாமல் வீட்டுக்குள்ளும் முடங்க முடியாமல் பெண்தலைமை குடும்பங்கள் படும் அவலம் சொல்லி மாளாது.

அண்மையில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் மரக்கறி சந்தையில் பேசிக்கொண்டார் "பிள்ளைகளுக்கு பாடசாலைக்கு போகும்போது சாப்பாடு கொடுத்து விடவேண்டி இருக்கு அதனால் காலையில் போய் கடைகளில் கடன் கேட்க முடியவில்லை அதிகாலையில் எந்த கடையிலும் கடன் கொடுக்க மாட்டார்கள் அதனால்தான் - கொஞ்சம் மாலை ஆகியதும் வாடிய மரக்கறிகளை குறைந்த விலையில் வாங்கி செல்ல வந்தேன் அவர்களின் பசியை போக்குவதுதான் முக்கியமாக இருக்கு - இப்போ ஒருவரும் உதவி செய்கிறார்கள் இல்லை" என மிகவும் நொந்து போய்க் கூறினார்.

இந்த நிலைமை எப்போதும் இருந்தால் பல பெண் தலைமை குடும்பங்கள் பட்டினியால் இறக்கும் சூழ்நிலை உருவாகுவதை தடுத்து விடவே முடியாது.

தனியாரின் சுயபொருளாதார உற்பத்தி முறைகள் மக்களை வெகுவாக சென்றடைவதில் சிரமம் இருப்பது அரசுக்கும் தெரிந்த விடயமே - அதை அரசாங்கம் கையிலெடுத்து மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் போதே அனைவரையும் சென்றடையும் இந்த விடயத்தை அரசு கவனிப்பதாக தெரியவில்லை.

தொடரும் ...



இருள்கவியும் இந்தமாலையில்
இன்னும் வானம்
அற்புதம் நிகழ்த்தும்,
நான் தொலைதூர பனிவெளிக்கு
பறக்க தயாராகிறேன்.
மரங்களும் கொடிகளும்
பூக்கவும் காய்க்கவும் கனியவும்
சலிக்காத பூமியை விட்டு,
இறுக்கப்படும் குரல்வளையோடு
சிரிக்க கற்றுக்கொண்ட
மக்கள் வாழும் பூமியை விட்டு,
காலையில்
பலவித மொழிகள்பேசும்
தங்கையின் கோழிகளைவிட்டு,
செம்மண் வீதியை
மூன்று பேடுகளுடன்
அடிக்கடி கடக்கும்
தோகை மயிலை விட்டு,
குலைத்தபடியே
ஓடிவரும் தெரு நாய்களை விட்டு,
நிறைந்துகிடக்கும்
சின்னக்குளத்தை விட்டு,
மீண்டும்
என்னுள் நானே
புதைந்தழிந்து விறைத்துப்போகும்
தேசத்தை நோக்கி
நகர்கிறேன்
வீதிநிறைந்த உறவுகள் விட்டு,
அனலாய்
உச்சிபிளந்து இறங்கும்
சூரியரைவிட்டு,
மாலையில்
மேகம் சரிந்து சொரியும்
மழையை விட்டு,
எதிர்காலம் மறுக்கப்படும்
சராசரி மனிதரை விட்டு
பனிதேசம் நோக்கி நகர்கிறேன்.
மருமகனின்
தோழமை நெருட
மருமகள்களின் சிரிப்பொலிகளை
காதில் நிறைத்தபடி,
பறக்கின்றேன்.
மீண்டும்
என் மண்ணுக்கு திரும்புவேன்
எனும் புன்சிரிப்போடு.

ஹம்சத்வனி
27.04.2022

**“சாதித் திமிருடன் வாழும் தமிழன் ஓர் பாதித் தமிழனடா”**

**-பாலசிங்கம்-**

# ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாய் ஒலித்த மக்கள் கலைஞனுக்கு கண்ணீருடன் சிரம் தாழ்ந்த அஞ்சலிகள்

**-பானுபாரதி-**



பாலசிங்கண்ணனை நான் முதல் முதலில் பார்த்தது ஒரு நாடக மேடையில்தான். 75 காலப்பகுதி என நினைக்கின்றேன். எங்களது ஊர்க்கோவிலின் முன்றலில் அவரது நாடகக் குழுவினருடன் “சமுதாய மாற்றத்திலே” என்ற நாடகத்தை மேடையேற்றியிருந்தார். நாடகம் சாதி ஒடுக்குமுறையைக் கருப்பொருளாகக் கொண்டிருந்தது. முழு நாடகமும் நினைவில் இல்லை என்றாலும், கிராமத்தில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற இளைஞனாக மேடையில் தோன்றி, “சாதித்திமிருடன் வாழும் தமிழன் ஓர் பாதித் தமிழனடா” என கணீரென்ற குரலில் அவர் பாடியது இன்னமும் பசுமையாக நினைவில் உள்ளது.

பின்னர் தொழில் காரணமாக எங்களது ஊரில் அவர் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தார். இந்தக் காலப்பகுதிகளில்தான் கிராமிய உழைப்பாளர் சங்கத்தில் தோழர்கள் கௌரி காந்தன், சின்னராசா, ராஜரட்ணம், ஜெகநாதன், சிறீதரன், மகாலிங்கம், தங்கராசா இவர்களுடன் இணைந்து யாழ் செம்மண் பிரதேசத்துக் கிராமங்கள் தோறும் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகவும், சமூக மாற்றத்தை முன்னிறுத்தியும் மக்களை ஒன்று திரட்டி களப்பணிகளில் ஈடுபட்டார்.

பாலசிங்கண்ணன், சின்னராசா, ஜெகநாதன், ராஜரட்ணம் இவர்களுக்குள் நடக்கும் விவாதங்களை மிக அருகிருந்து பார்த்திருக்கிறேன். உரத்த குரலில் மிகவும் காட்டமாக அந்த விவாதங்கள் நடந்தன. அந்தக் கோபமும், தீவிரமும், கருத்து மோதல்களும் விவாதங்களின் முடிவில் காணாமல் போய்விடும்.

இவர்களுக்கிடையேயான விவாதங்களின் தீவிரத்தைப் பார்த்துப் பயந்த அதே வேளைகளில் விவாதங்களின் முடிவில் அவர்களிடையேயான தோழமையையும், நேசிப்பையும் கண்டு வியந்தும் போயிருக்கிறேன்.

*பின்நாட்களில், இவரோடு இணைந்து பணியாற்றும்போது கிடைத்த அனுபவங்கள் என்றும் மறக்க முடியாதவை.*

*கிராமியக் கலைக்குழுவோடு இணைந்து "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகத்தை கிராமங்கள் தோறும் மேடையேற்றினோம். அந்தப் பணிகளின்போது நீண்ட தூரங்கள் கிராமங்கள் தோறும் இவரோடு பயணித்திருக்கின்றேன்.*

*அந்தப் பயணங்களின்போது வேறு வேறு நாடுகளில் நடந்த விடுதலைப் போராட்டங்களினது வரலாறுகள் பற்றியும், எங்களது விடுதலைப் போராட்டம் பற்றியும் விபரித்துக் கொண்டே வருவார். இவரிடமிருந்து கற்றுக் கொண்டவை ஏராளம்.*

*அவ்வப்போது எனக்குக் குழப்பங்கள், சிக்கல்கள் ஏற்படும்போது, சிறு குழந்தையைப் போல அடிக்கடி அவர் முன்பு ஓடிப்போய் நின்றிருக்கின்றேன். அவரும் ஒரு தந்தைக்குரிய அன்போடும் அக்கறையோடும் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு எனது குழப்பங்களுக்கு பதிலளிப்பார்.*

*இவரது பாசறையில் வளர்ந்தவள் என்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் எனக்கு எப்போதும் உண்டு.*

*சிறந்த நாடகாசிரியர், சிறந்த நெறியாளர். பல நாடகப் பிரதிகளை எழுதி மேடையேற்றி இருக்கின்றார். ஒவ்வொரு தடவையும் "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகம் மேடையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது, ஒவ்வொரு பாத்திரங்களும் அரங்கிற்குப் பின்னால் நிற்கும் அவரது முகத்தில் மாறி மாறி பிரதிபலித்தபடியே இருக்கும். இந்த அதிசயத்தை ஒவ்வொரு முறையும் நான் அநுபவித்திருக்கின்றேன். அந்நாடகத்தில் வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரும் அவரது முகத்தில் இடம் பெறுவார்கள். அவரே சின்னப்பண்ணையாகவும், நாகலிங்கமாகவும், கந்தையாவாகவும், சின்னம்மாவாகவும், குமாராகவும் கணப்பொழுதில் மாறிக்கொண்டே இருப்பார்.*
*ஒரு சிறந்த நெறியாளனுக்குரிய பண்பு அது.*

*மிகவும் துயரமான விடயமென்னவெனில், "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" ஆவணப்பிரதியாக்க நாங்கள் எடுத்த முயற்சிகள் அப்போதிருந்த நாட்டு நிலமைகளால் செயற்படுத்த முடியாமல் போய் விட்டது. அவரைப் புறந்தள்ளி ஈழத்துத் தமிழ் நாடக வரலாறு என்பது முழுமை பெற முடியாது.*

*2018இல் ஊருக்குச் சென்றிருந்த போது அவரைச் சந்தித்திருந்தேன். யுத்தகால நெருக்கடியான வாழ்வனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.*

*அத்தனை அவலங்களுக்கும் இழப்புக்களுக்கும் நேரடியாக முகம் கொடுத்திருந்தபோதும், அதே உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் அவர் காட்டிய அக்கறை என்னை ஆச்சரியப்பட வைத்தது.*

*மீண்டும் 2019இல் அவரைச் சந்தித்தபோது அவர் தளர்ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. வழமையாக அவரிடம் இருக்கும் உற்சாகம் குன்றி மிகவும் தளர்ந்து போயிருந்தார். எதுவும் செய்ய முடியாத கையறு நிலமையில் இருப்பதாக மிகவும் வருத்தப்பட்டார்.*

*பாலசிங்கண்ணையின் வாழ்க்கைத்துணையான, அவரது எல்லாமுமான தங்கா அக்காவிற்கு எத்தகைய ஆறுதலைச் சொல்வதெனத் திகைக்கிறேன். அவரது பயணத்தில் எல்லாக் காலமும், எல்லாத் துன்பங்களிலும், எப்போதும் உடனிருந்தும், இணைந்து பயணித்தவர்.*

*எனது கண்ணீரையும் அன்பையும் அவரோடு பகிர்ந்து கொள்கின்றேன்.* □

# பலவீனமான தேசத்தை உருவாக்கும் காய் நகர்த்தல்...

-கருணாகரன்-

அரசியற் கொந்தளிப்பு, பொருளாதார நெருக்கடி என நாடு பெரும் பிரச்சினைச் சூழலுக்குள் சிக்குண்டிருக்கிறது. பலரும் கருதுவதைப்போல இது இப்பொழுது "இந்த ஆட்சியில்" ஏற்பட்ட திடீர் நெருக்கடியல்ல. அல்லது இந்த நெருக்கடிக்கு ராஜபக்ஸவினர் மட்டும் காரணமும் அல்ல. ஆனால் இந்தத் தரப்புக்குக் கூடுதல் பொறுப்புண்டு. இவர்கள் முன்னரும் அதிகாரத்தில் இருந்தனர் என்பதோடு இப்பொழுதும் ஆட்சியில் இருக்கும் தரப்பாக உள்ளனர் என்பதால் இந்தப் பொறுப்புக் கூடுதலாகச் சேருகிறது.
ஏனென்றால் நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டியவர்கள் ஆட்சியில் இருப்பவர்களே. ஆகவே அவர்கள் மீதே கவனம் குவிகிறது. அதுவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த காலத் தவறுகள் என்பதைப் பட்டியலிட்டால் அதில் பல காரணங்கள் வந்து சேரும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமை, அதன் விளைவான 30 ஆண்டுகாலப் போர், போரினால் ஏற்பட்ட மனித வள இழப்பு, பொருளாதார இழப்பு, இயற்கை வள இழப்பு போன்றவை, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையில் ஏற்பட்ட தவறுகள், திறந்த பொருளாதாரக் கொள்கை, வரவு செலவுத்திட்டங்களில் தொடர்ந்த துண்டு விழும் தொகை, அதற்கு மேற்கொள்ளப்பட்ட தொடர் வெளிநாட்டுக் கடன்கள், ஊழல், முறையற்ற - அளவுக்கதிகமான அரசியல் நியமனங்கள், அளவுக்கதிகமான நிவாரணமளித்தல்களும் வரிச்சலுகைகளும் என பெரியதொரு பட்டியல் நீள்கிறது.

இந்தத் தவறுகளில் கடந்த 40 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த ஐ.தே.க, சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்குக் கூடுதல் பங்குண்டு. அதேயளவுக்கு மக்களுக்கும் இதில் பொறுப்புண்டு. தெரிந்து கொண்டே தவறிழைக்கும் தரப்புகளாகிய இவற்றை மக்கள் ஆதரித்து ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர். இதேயளவுக்கு அல்லது அதற்கும் கூடுதல் பொறுப்பு, இந்த நாட்டின் படித்த உயர் பதவிகளில் இருந்த, இருக்கின்ற புத்திஜீவிகளுக்கும் உண்டு.

ஒரு நாட்டின் நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் அறிஞர்களே. அதற்காகத்தான் அவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகளும் சலுகைகளும் சிறப்பு ஏற்பாடுகளும் அளிக்கப்படுகின்றன. மேற்படிப்பு, வெளிநாட்டுக் கற்கை, வாகன இறக்குமதிக்கான வரிச்சலுகை எனப் பலவும் வழங்கப்படுவது இவர்கள் நாட்டுக்கு புத்திபூர்வமாக ஆற்றக்கூடிய பங்களிப்புகளுக்காகவே.

இப்படி உயர் வாய்ப்புகளையும் சலுகைகளையும் பெற்ற, பெற்றுக் கொண்டிருக்கின்ற அறிவுத்துறையினரும் அறிவுசார் அமைப்புகளும் இந்த நாட்டின் அரசியல் நெருக்கடிக்கும் (இனப்பிரச்சினை உள்பட) பொருளாதார நெருக்கடிக்கும் ஆற்றிய "வழங்கிய" பங்களிப்பு என்ன?

இப்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் பற்றி விழுந்தடித்துக் கொண்டு வந்து பல்வேறு அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கிறார்கள். பதிலாக பெறுமதியான ஆலோசனைகளை வைப்பதற்கு இன்னும் தயாரில்லை.

அப்படி எதையாவது சொல்வதாக இருந்தாலும் ஐ.எம். எ்.வ்வுக்குச் செல்லுங்கள், வெளிநாட்டுக் கடனைப் பெறுவதற்கான இலகு வழிகாட்டுதல்கள் என்ற மாதிரி பிழையான திசைகளைக் காட்டுவதாகவே இருக்கிறது.

இலங்கையில் நிலையான, உறுதிப்பாடுடைய அரசாங்கம் அமையக் கூடாது என்பதில் “அயலவர்கள்” உட்பட வல்லாதிக்கச் சக்திகள் மிகுந்த கரிசனையாக உள்ளன. அவர்களுடைய மெகா திட்டத்தின்படியே இன, மத முரண்களும் உள்நாட்டுப் போரும் தீவிரமடைந்தன. (பிரித்தாளும் தந்திரத்தின் நீட்சி).

இனக்கலவரங்களை உருவாக்குவதிலும் இனமுரண்பாட்டை வளர்ப்பதிலும் போருக்குத் தூண்டுவதிலும் போரை நடத்தியதிலும் இந்த அயலவர்களுக்கிருந்த பங்கு பெரியது. கூடவே பிற வல்லாதிக்கத் தரப்புகளுக்கும்.
போருக்கு வேண்டிய முன்னணி - பின்னணி உதவிகளை மனமுவந்த கடன் அடிப்படையில் இவை செய்ததையும் பயிற்சிகள் வழங்கியதையும் நினைவிற் கொள்க.

இப்பொழுது இன்னொரு வடிவத்தில் இதை இந்தத் தரப்பினர் வெற்றிகரமாகச் செய்து வருகின்றனர். கடந்த “நல்லாட்சி” அரசாங்கத்தை நான்கு ஆண்டுகளுக்குள் குலைத்தனர். இந்த அரசாங்கத்தை இரண்டாண்டுகளுக்குள் தடுமாற வைத்துள்ளனர். இதற்கான தூண்டு விசைகளை ஆராய்ந்தால் உண்மை புலப்படும்.

ஆக மொத்தத்தில் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலின்படி “ஸ்திரமற்ற இலங்கை” ஒன்றே இருக்க வேண்டும். அந்தப் பலவீனமான இலங்கையில்தான் அவர்களால் நினைத்த எதனையும் செய்து கொள்ள முடியும். அதற்கமையவே காய்களை மிக நுட்பமாக நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த ராஜதந்திரப் பொறிக்குள் நீண்டகாலமாக இலங்கையர்கள் மடத்தனமாகச் சிக்கி விட்டனர். இதைக்குறித்து நம்முடைய தலைவர்களோ புத்திஜீவிகளோ அறிவுசார் அமைப்புகளோ அரசியல் ஆய்வாளர்களோ முன்னுணர்ந்து சொன்னதில்லை. அப்படி ஒருசில குரல்கள் அங்கங்கே எழுந்திருந்தாலும் அதை எவரும் செவிகொடுத்துக் கேட்டதுமில்லை. கேட்கும் நிலையில் யாரும் இருந்ததும் இல்லை.

ஏன் இப்பொழுது கூட எந்தச் சிறிய அறிவுரையிலிருந்து பெரிய விசயங்கள் வரையில் எதைச் சொன்னாலும் அதைக் காது கொடுத்துக் கேட்பதற்கு யாருமே, எந்தத் தரப்புமே தயாராக இல்லை.
எல்லாமே மூடத்தனத்திலும் அதிகார மமதையிலும்தான் உள்ளன. அதிகார மமதை என்பதே மூடத்தனத்தின் முதல் அடையாளம்தானே! ஆக மொத்தத்தில் பிற சக்திகள் விரித்த கண்ணிகளில், பொறிகளில் இலகுவாக இலங்கையர்கள் அனைவரும் சிக்கி விட்டனர்.

இந்தப்பொறியில் முட்டாள்தனமாக நமது தலைமைகளும் மக்களும் விழுந்திருக்கின்றனர் என்பதே மிகப் பெரிய துயரம்.
இந்த முட்டாள்தனத்துக்கான (அறிவீனத்துக்கான) கூட்டுத் தண்டனையே இன்றைய நெருக்கடியாகும்.
இப்பொழுது அதிலிருந்து மீள்வதற்கு வழிதெரியாமல் தவிக்கின்றனர்.
இப்பொழுது நாடே தெருவில் நிற்கிறது. இருளில் மூழ்குகிறது.

எதை நோக்கி இலங்கையை வெளிச்சக்திகள் வழிநடத்தினவோ அதை அவை அடைந்து விட்டன. இப்பொழுது அந்த வெளிச்சக்திகளின் சந்தையாகவும் கடனாளியாகவும் இலங்கை மாறியுள்ளது, மாற்றப்பட்டுள்ளது.
ஏறக்குறைய இது நாமே நமக்கான புதைகுழியைத் தோண்டியதற்குச் சமம்.

இவ்வளவும் நடந்து இப்படியொரு நிலை வந்த பிறகும் கூட நடந்த கடந்த காலத் தவறுகளுக்கோ

நடந்து கொண்டிருக்கும் நிகழ்காலத் தவறுகளுக்கோ யாரும் பொறுப்புக் கூறவும் தயாரில்லை. பொறுப்பெடுக்கவும் தயாரில்லை.

பதிலாக ஒவ்வொருவரும் பிறரை நோக்கி கையைக் காட்டித் தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ள (தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே) விரும்புகின்றனர்.

2009 இல் யுத்தம் முடிந்த போது, இனிப் பிரச்சினையில்லை. நாடு மெல்ல மெல்ல புதிய வளர்ச்சியைப் பெற்று விடும் என்று பலராலும் நம்பப்பட்டது. அந்த நம்பிக்கையை வலுப்படுத்தக் கூடியமாதிரியே "அபிவிருத்தித்திட்டங்கள்" என்ற பேரில் பல்வேறு புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வீதிகள் மேம்படுத்தப்பட்டன. துறைமுகங்கள் விருத்திசெய்யப்பட்டன. பாட-சாலைகள், மருத்துவமனைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. நாடு முழுவதும் எல்லோருக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்ற அறிவிப்போடு அனைவருக்கும் மின்விநியோகம் செய்யப்பட்டது. வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. இப்படி எல்லாமே முன்னேற்றகரமாக இருந்தன. இந்த மகிழ்ச்சியில் பலரும் சுற்றுலாவில் நாடுலாவினர். ஆனால், இந்த மகிழ்ச்சிக் காலத்துக்கு ஆயுள் நீடிக்கவில்லை. ஒரு பத்துப் பன்னிரண்டு ஆண்டுக்குள் கண்பட்டதைப்போல எல்லாமே நாசமாகி விட்டன.

இப்பொழுது நாளில் பெரும்பகுதியும் மின் வெட்டாகியுள்ளது. எரிபொருள் தொடக்கம் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு மக்கள் க்யூவில் நிற்க வேண்டியுள்ளது. பண வீக்கம் தலைவிரித்து, உச்ச விலையில் பொருட்கள் விற்கப்படுவதால் கையில் உள்ள காசெல்லாம் சடுதியாகக் கரைந்து கொண்டிருக்கிறது.

இப்படியே போனால் ஆறு மாதத்தில் பஞ்சம் பெருகி விடும். யுத்தம் முடிந்த பிறகு உண்டான சனங்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் பொய்த்து விட்டன. அதனால்தான் மக்கள் தெ-ருவில் இறங்கி தமது கொதிப்பையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துகிறார்கள். சிறு நெருக்கடி ஏற்பட்டாலும் அதையிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவது எதிர்க்கட்சிகளின் வழமை. மக்களின் இயல்பு. இப்பொழுது ஏற்பட்டிருப்பது பெரியதொரு பொருளாதார நெருக்கடி. ஆகவே மக்களின் கொதிப்புணர்வும் அதற்கு ஏற்றமாதிரி உச்சமாகவே இருக்கும்.

மக்கள் இருளிலும் தெருவிலும் நிற்கும் வரை, பொருள்களின் விலை குறையும் வரை, தங்களுடைய நெருக்கடிகள் தீரும் வரையில் அவர்கள் அடங்கப் போவதில்லை. இந்தச் சூழலில் மக்களுடைய உணர்வுகளின் பின்னால் நின்று தமது அரசியல் லாபத்தை அடைவதற்கே எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. மாறாக, ஏற்பட்டிருக்கும் தேசிய நெருக்கடிக்கு எப்படித் தீர்வு காண முடியும்? அதற்கான பொறிமுறைகள் என்ன? எனச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மாற்று உபாயங்களை முன்வைப்பதற்கும் தயாரில்லை.


மட்டுமல்ல, இவ்வளவு நெருக்கடிச் சூழலில் நிற்கின்றபோது கூட மக்களும் சரி அரசியற் தரப்பினரும் சரி இனமுரணை எப்படித்தீர்த்துக் கொள்வது? நாட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து எப்படி இந்த நெருக்கடியைக் கடப்பதற்காக செயற்படுவது? அதற்குரிய பன்மைத்துவச் சூழலை உருவாக்குவது எப்படி? ஜனநாயக அடிப்படைகளை வலுவாக்கம் செய்து பேணுவது எவ்வாறு என்று சிந்திக்கவும் இல்லை.

இடதுசாரிகள், ஜனநாயகவாதிகள் கூட இந்தச் சந்தர்ப்பத்தில் தடுமாறுகின்றனர். அல்லது என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிப்போயுள்ளனர். இதில் ஜே.வி.பியும் அடக்கம்.


இதெல்லாம் எதைக் காட்டுகின்றன?
இன்னும் மெய்யான பிரச்சினையை உணரவும் அதைச் சீர் செய்யவும் தயாரில்லை என்பதைத்தானே! □

# உயிரோடு உறவாடு

## வாசகர்களின் உடல்- உளம் சம்பந்தமான கேள்விகளும் வைத்தியரின் பதில்களும்




**எனக்கு சில நாட்களாக நாசி, கண்ணிமை போன்றவற்றில் மிகவும் நோவாக உள்ளது. தலையிடியும் ஏற்பட்டுள்ளது. எனது வைத்தியரிடம் சென்றேன். இது Bihulebetegnelse, Sinusitis(புரையழற்சி) எனக் கூறியுள்ளார். சுவாசிப்பது எல்லாம் மிகவும் கஷ்டமாக உள்ளது. புரையழற்சி என்றால் என்ன?**




*இதிலேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது போல எமது முக எலும்பினுள் மூக்கு மற்றும் கண்ணைச்சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு பக்கத்திற்கு மூன்றாக மொத்தம் ஆறு குழிகள் காணப்படுகின்றன. இவற்றின் உட்பகுதி மெல்லிய கலங்களால் சூழப்பட்டிருக்கும் இக்குழிகள் சிறிய துவாரத்தினூடாக மூக்கின் அடிப்பகுதியில் (நாசியில்) திறக்கின்றன. வைரசு அல்லது பக்றீரியாக்களின் தொற்று எமது மூக்கு, தொண்டை போன்றவற்றில் ஏற்படுகின்ற போது மேற்பரப்பிலுள்ள கலங்களில் வீக்கம் ஏற்படுகின்றது இதனால் சிலவேளைகளில் புரைகுழிகளிலிருந்து நாசிக்கு வரும் துவாரம் அடைபடுவதுமுண்டு. இவ்வாறு இத்துவாரம் அடைபடுகின்ற போது ஏற்படுகின்ற அமுக்க வேறுபாட்டினால் அப்பகுதியில் நோ ஏற்படுகின்றது. இதன் அடுத்த கட்டமாக புரைகுழிகளிலும் பக்றீரியாக்கள் பெருகும் வாய்ப்புமுண்டு.*

**இதற்கான அறிகுறிகள் என்ன?**

*புரைகுழிகளை சுற்றியுள்ள பகுதியில் நோ ஏற்படும், முன்னோக்கி குனியும்போது இந்த நோ பலமடங்கு கூடும் வாய்ப்புண்டு. மூக்கிலிருந்து துர்நாற்றமுள்ள சளி வடியும். காய்ச்சல், உடற்தளர்ச்சி காணப்பட்டால் பக்றீரியாத் தொற்றாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது.*

**இது நீண்ட காலம் இருக்குமா?**

*ஆம். நீண்ட காலம் இருப்பதற்கும் அடிக்கடி தொற்று ஏற்படுவதற்கும் சாத்தியக்கூறுகள் உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான வைத்திய நிபுணரை நாடுவது நலம்.*

**இது தொற்று நோயா?**

*வைரசு, பக்றீரியா போன்ற கிருமிகளினால் ஏற்படுவதால் இதை தொற்றுநோய் என அழைப்பதே பொருத்தமானதாகும்.*

**எனக்கு கொரோனா தொற்று நோய் வந்த பின்னர் தான் இந்த புரையழற்சி Bihulebetegnelse வந்தது? ஏதேனும் தொடர்பு உள்ளதா?**

*கொரோனா தொற்றின் போதும் வைரசின் தாக்கத்தால் மூக்கு, தொண்டை போன்றவற்றில் மேற்பரப்பிலுள்ள கலங்களில் வீக்கம் ஏற்படுகின்றது இது இயல்பாகவே புரையழற்சி ஏற்பட வழிவகுக்கின்றது.*
*எனவே மூக்கு, தொண்டை போன்றவற்றில் மேற்பரப்பிலுள்ள கலங்களில் வீக்கத்தை தணிப்பதற்கான மூக்குத்துவாரங்களில் அடிக்கும் spray மற்றும் நோவைக் குறைப்பதற்கான மருந்து என்பன அடிப்படை சிகிச்சையாக அமைகின்றது. ஆனால் 5-7 நாட்களுக்கு மேல் உபாதைகள் தணியாதவிடத்து antibiotica எடுக்க வேண்டிய தேவையேற்படலாம்.*
*சில வேளைகளில் புரைகுழி துவாரங்களை அண்டிய பகுதிகளில் மூக்கினுள் கட்டிகள் வளர்வதாலும் இவை புரைகுழித் துவாரங்களை அடைப்பதாலும் புரையழற்சி ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கட்டிகளை சத்திர சிகிச்சை மூலம் அகற்ற வேண்டி ஏற்படலாம். எனவே காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான வைத்திய நிபுணரை சந்திப்பது இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசியமானது.* □

கதை



# சாய்மனைக் கதிரை

-மனோ-

*மென்மை படர்ந்த அப்பாவின் சாய்வு நாற்காலி எப்படி மரமானது என்று எனக்கு நினைவில்லை. நீண்டகாலமாக மரத்திலான அது விறைத்த நாற்காலியாகவே இருந்தது. தலையணை கூடக் கிடையாது.*

*முதிர்ந்த தேகத்தில் எப்படி வலி எடுக்காது இருந்திருக்கும்? இப்போது யோசித்துப் பார்க்கிறேன். அப்பாவின் நினைவு எப்போதும் கண்களில் நீரைத் திரையிட்டுக்கொண்டே இருக்கிறது.*
*அப்பா அநேக வேளைகளில் சாய்வு நாற்காலியில் தியானத்தில் இருப்பது போலவே படுத்துக்கிடந்தார். ஆனால் அவரது மனம் எங்களைப் படர்ந்த படியே கிடந்தது. கடைசிக் காலங்களில் நீண்ட அமைதி அவரிடம் குடிகொண்டிருந்தது. எதற்குமே எரிந்து விழுந்துகொண்டு சிடுசிடுவென பேசித்திரிந்த அப்பா ஆடி அடங்கிக் கிடப்பதைப் பார்க்கக் கஸ்ரமாகத்தானிருந்தது.*

*அப்பா ஒரு நேர் பேர் வழி. எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கைக் கடைப்பிடித்தார். அவரிடம் கண்டிப்பிருந்தது. அவரிடம் கடுமையான உழைப்பிருந்தது. எங்களுடன் மிக கண்டிப்பாக நடந்து கொண்டார். அவருடைய சின்ன அதட்டலுக்கும் நாங்கள் பயந்து நடுங்கினோம். ஏன் அம்மா கூட நடுங்கினா.*

*வாழும் வரை எங்களுக்கு அப்பாவைப் பிடிக்கவே இல்லை.*
*காலையில் நேரத்துக்கு எழும்பவேண்டும். குறிப்பிட்ட நேரத்துக்குள் படுத்துவிடவேண்டும். தேவையில்லாமல் தொலைக் காட்சி பார்ப்பதோ வெளியில் நண்பர்களுடன் சேர்ந்து நேரகாலம் இல்லாது விளை-யாடுவதோ தடைசெய்யப்பட்டிருந்தது. அம்மாவின் வாழ்க்கை எப்போதும் அடுப்படிக்குள்ளேயே கரைந்தது. எங்கள் தவறுகளுக்கும் சேர்த்து அம்மாவே தண்டனைகளை அனுபவித்துக்கொண்டிருந்தார். ஆனாலும், இரவில் அவர்கள் ஒன்றாகவே தூங்கி எழுந்தார்கள். காலையில் அம்மா எப்போதும் பிரகாசமாகவும் உற்சாகமாகவும் இருந்தார்.*

*அப்பா எங்களுக்கு ஒரு கிட்லர் தான். அப்பாவுக்குள்ளும் ஒரு இதயம் கிடந்ததை நாங்கள் அறிந்திருக்கவில்லை. அது எங்களுக்காய் துடித்ததை உணர காலம் தேவைப்பட்டது. உணரும்போது அப்பா எங்களுடன் இல்லை. சரியான விடயங்களைக் கண்டடைவதற்கு நாங்கள் காலத்திற்காய் காத்திருக்கவேண்டி இருக்கிறது. ஆனால் காலம் ஒருபோதும் எங்களுக்காய் காத்திருப்பதில்லை.*

*எனது ஒரே தங்கையின் திருமண மண்டபத்தில் அப்பா விம்மி வெடித்து அடக்கியதை நான் ஓரக்கண்ணால் பார்த்தேன். அம்மா சிரித்தபடி மகிழ்ச்சியாய் பூரித்து நிற்க, அப்பா அழுகையை கட்டுப்படுத்தியபடி நின்றார். அவர் உதடுகள் துடித்தன. பற்களால் உதடுகளை அவர் கடிப்பது தெரிந்தது. அவர் கோபத்தில்தான் கடிக்கிறார் என்று நினைத்தேன். ஆனால் அப்படி அல்ல. அவர் தனது மகளின் பிரிவு வேதனையில் துடித்தார். இருபத்தைந்து வருடங்களாக உரிமை கொண்டாடிய தனது பாசமகளுடன் இனி உரிமை கொண்டாடமுடியாது என்ற வேதனை அது.*

*மார்பிலும் தோளிலும் தவழ்ந்த மகள் இனி இன்னொருவருக்குச் சொந்தம் என்ற மனப்படிமம் அவரை வாட்டியது. இது தேவையில்லாத ஒன்றுதான். ஆனாலும் அவர் வருந்தினார். இவ்வளவு காலமும் தனது கட்டுக்குள் தன்னையே நம்பியிருந்த மகள், தான் எவ்வளவு கடுமையாக நடந்துகொண்டபோதும் தன்மீது எவ்வளவு பாசத்தையும் மரியாதையும் வைத்திருந்தாள் என்பதை அவர் நினைத்திருக்கலாம்!*

*கண்களிலிருந்து ஒரு துளி சொட்டியது. யாரும் காணாதவாறு குனிந்து சமாளித்தார்.*
*அந்த நேரத்திலும் தன் மகள் கவலைப்படக்கூடாது என்றும் நினைத்திருக்கலாம்!*
*அப்பா இவ்வளவு பாசத்தை ஏன் தனக்குள் ஒழித்து வைத்திருந்திருக்கவேண்டும்? அவர் எங்கோ தவறிழைத்திருக்கிறார். சின்னதாக மிகச்சின்னதாக அவர் தன்னைச் சரிசெய்துகொண்டிருந்தால் எங்கள் இளமைக்காலம் எவ்வளவு மகிழ்ச்சியாய் கழிந்திருக்கும். அம்மாவின் காலம் எவ்வளவு மகிழ்ச்சி நிரம்பியதாய் இருந்திருக்கும்? ஏன் அப்பாவால் முடியவில்லை?*

*நாங்கள் நல்ல நிலையில் இன்று இருப்பதற்கு அப்பாதான் காரணம். மறுப்பதற்கு இல்லை. ஆனால் எங்கள் இளமையைத் தொலைத்தே இந்த நிலையை அடைந்தோம் என்பதும் கவலையாகத்தான் இருக்கிறது. எங்கள் இளமைக் காயங்கள் சங்கிலித் தொடர்போல் தொடர்கின்றன. எங்களையறியாமலே எங்கள் பிள்ளைகளையும் நாங்கள் காயப்படுத்துகிறோம்.*

*அப்பா வேண்டுமென்றே எதையும் செய்ததில்லை. காலங்காலமாக அப்பாக்கள் இப்படித்தான் கட்ட மைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்பாக்கள் மீது பொறுப்புகள் சுமத்தப்படுகின்றன. அப்பாக்கள் குடும்பத் தற்காப்பாளர்களாக நியமனம் பெற்றுவிடுகிறார்கள். தங்கள் பொறுப்புகளை செவ்வனே செய்து முடிக்க அவர்கள் கடும் பிரயத்தனம் எடுக்கிறார்கள். அவர்கள் எடுக்கும் முக்கிய பாத்திரம் வில்லன் பாத்திரம்தான்.*

*இந்தப் பாத்திரங்களை மிக இலாவகமாக அம்மாக்களே வழங்கி, ஒரு வகையில் அப்பாக்களை பழிவாங்கியும் விடுகிறார்கள். அம்மாவும் எவ்வளவு காலம்தான் பொறுத்துக்கொண்டிருப்பது? அம்மா ஒருபோதும் தனக்காக வாழ்ந்ததில்லை. அம்மா தன்னுடைய அப்பாவுக்கும், சகோதரனுக்கும் கட்டுப்பட்டு பின் எங்கள் அப்பாவுக்கு கட்டுப்பட்டு பின் எங்களுக்கும் கட்டுப்பட்டு வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுவிட்டார். அம்மாவுக்கென்று ஆசாபாசங்கள் விருப்பு வெறுப்புகள் எதுவும் இருந்ததில்லை. இருந்தவற்றையும் தனக்குள்ளே கருக்கிக்கொண்டார்.*

*அப்பாவின் முதுமைகாலப் பணிவிடைகள் அம்மாவுக்காக காத்துநின்றன. அம்மா அதை மனவிருப்போடுதான் செய்து கொண்டிருந்தார். ஆனாலும் அம்மாவின் மனம், நிறைந்த காயங்களால் நிரம்பிக் கிடந்தது.*

*அப்பாவின் உடல் தளர்ந்துகொண்டே போனது. அவரிடம் முன்பிருந்த கம்பீரம் இப்போ இல்லை. முன்புபோல் அவரால் கர்ஜிக்க முடியவில்லை. சிறிதுசிறிதாக எங்களிலும் தங்கியிருக்கவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. அதனால் எங்களிடம் அவர் பணிந்தார். அம்மாவிடம் முடியவில்லை. அவருக்கு மனஅழுத்தம் அதிகமாகியது. தன்னுடைய மன அழுத்தம் முழுவதையும் ஒருங்குதிரட்டி வடித்துவிடக்கூடிய வடிகாலக அம்மாவையே அவர் பயன்படுத்தினார்.*

*வழமைபோல ஒருநாள் அவர் அம்மாவை அதட்டினார். அம்மாவின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு! அம்மா திருப்பி யாருமே எதிர்பார்த்திராத பலமான ஒரு குரலைக் கொடுத்துவிட்டா. அவ்வளவுதான்! அம்மாவிடமிருந்து இப்படி ஒரு எதிர்க்குரலை அப்பா எதிர்ப்பார்க்கவேயில்லை. ஆடிப்போய்விட்டார். அன்றிலிருந்து அவர் எதுவுமே பேசவில்லை. சாப்பிடுவதற்கு மட்டும் வாயைத் திறந்தார்.*

*சாப்பாடுகூட அவரை வெறுத்தது. பசி ஒறுத்தார். அம்மாவும் நாங்களும் அவரைப் பேசவைக்க கடும்பிரயத்தனம் எடுத்தோம். படாத பாடுபட்டோம். எங்கள் முயற்சி அவரை மேலும் இறுக்கிவிட்டது. நாட்கள் வாரங்கள் மாதங்களாகின. எந்தநேரமும் சதா அதிர்ந்து கொண்டிருந்த அப்பாவின் மௌனம் எங்களை வேதனைப்படுத்தியது. சரியாக ஆறாவது மாதம் அப்பா நிரந்தரமாகவே மௌனமானார்.*

*அவரது சாய்மனைக்கதிரை அப்படியே விறைத்தபடி கிடக்கிறது. ஆனாலும் அப்பா கால்களை உன்னுகிறார். அது மெதுவாக அமைதியாக ஆடிக்கொண்டே இருக்கிறது.*
*அப்பாவின் குரல் மட்டும் எங்களுக்கு கேட்கவேயில்லை.* □




# இது சினிமா விமர்சனமல்ல!



டாணாக்காரன் திரைப்படம் தனது கடமையைச் சரியாகச் செய்து விட்டது என்றே தோன்றுகிறது!
ஆம்! காவல் துறைப் பயிற்சிப் பள்ளிகளின் நடைமுறைகள், குறைபாடுகள், குறித்து வெளி உலகிற்கு அறிமுகப் படுத்தியதுடன் துறைசார் சீர்திருத்தங்களுக்கு ஓர் துவக்கப் புள்ளியாகவும் அமைந்து விட்டது.
முதலில் காவலர் பயிற்சிப்பள்ளிகளில் புகார் பெட்டிகள் அமைக்கப்படும் என்ற உயர் அதிகாரிகளின் அறிவிப்புச் செய்திகள் பத்திரிகைகளில் வந்தன. இப்போது 43 காவலர் பயிற்சி ப்பள்ளிகளிலும் டாணாக்காரன் திரையிடப்பட்ட செய்தியும் வந்துள்ளது.

இது நல்ல ஒரு துவக்கமாகத் தெரிகிறது. ஓர் துறைசார் விமர்சனத்தை ஏற்றுப் பரிசீலிக்க, சீர் திருத்த முயலும் ஓர் நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளது. இதனை ஓர் கலைவடிவிலான துறைசார் கவுன்சிலிங் என்று கூட கூறலாம்.

தமிழ்ச் சமூகத்தைச் சீர்படுத்தியதில் திராவிட இயக்க சினிமாக்களுக்கு ஓர் பங்கு இருந்ததைப் போலவே 1990 களுக்குப் பின் தமிழ்ச் சமூகத்தை சீரழித்ததிலும் தமிழ்ச் சினிமாவுக்கு ஓர் கணிசமான பங்குண்டு. அந்த வகையில் கடந்த (1990-2010) 20 ஆண்டுகளில் காவல் துறையினரை கொம்பு சீவி விட்டதில் இயக்குனர் ஹரி, கவுதம் வாசுதேவ் மேனன், பிரபுதேவா (போக்கிரி) ..... போன்றோருக்கு முக்கியப் பங்கு உண்டு. குறிப்பாகச் சொல்வதென்றால் "நான் போலீஸ் இல்லை பொறுக்கி!" என்பது போன்ற வசனம் எல்லாம் காவல் துறையினர் மத்தியில் என்ன மாதிரியான உணர்வைக் கட்டமைத்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.
அதே போல எண்கவுண்டர் கொலைகளை மிகவும் ரசித்து வித விதமாகச் செய்யும் காவல் துறை அதிகாரிகளே போற்றத்தக்கவர்கள், ஹீரோக்கள் என்ற ஓர் எண்ணத்தையும் மக்களுக்கு இவர்களது திரைப்படங்கள் ஏற்படுத்தின.

இத்தகைய தமிழ்ச்சினிமா சூழலில் தான் முதல் முறையாக டாணாக்காரன் திரைப்படம் காவலர்கள் உருவாக்கப்படும் விதத்தையும், அவர்களது உளவியல் கட்டமைக்கப் படும் விதத்தையும், காவலர்கள் மத்தியில் நிலவும் ஜாதிய வர்க்க ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடுகள் அதனால் எழும் முரண்பாடுகள், மோதல்கள் பற்றியும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தி உள்ளது.
காவலர்கள் மத்தியில் உள்ள இந்தப் பாகுபாடுகள் வெளியே உள்ள யதார்த்த சமூகத்தில் ஒழியும் போதே சமூகத்தின் ஓர் அங்கமான காவல் துறையுள்ளும் ஒழிய முடியும் என்ற உண்மையை நமக்கு உணர்த்தினாலும்



இத்தகைய ஜாதிய வர்க்க உணர்வுக்கு ஆட்பட்ட காவலர்கள் பொதுமக்களிடம் எத்தனை ஜாதிய, வர்க்கப் பாகுபாட்டுடன் சட்ட விரோதமாக நடந்து கொள்வர் என்பதையும் டாணாக்காரன் காட்சிப் படுத்தியுள்ளது.

இத்திரைப்படத்தைப் பார்க்கும் காவல்துறையைச் சார்ந்த எளிய குடும்பத்து உறுப்பினர்களே அதிர்ச்சி அடைந்திருப்பர் என்றே சொல்ல வேண்டும். தங்களது கணவர் அல்லது சகோதரர், மனைவி அல்லது சகோதரி இத்தனை துன்பத்தை அனுபவித்து தான் போலீஸ் ஆனார்களா? என்ற கேள்வி எழுந்திருக்கும்.

இத்திரைப்படத்தைப் பொறுத்தவரை மிகவும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விசயம் அது முன் வைக்கும் அரசியல். நிலவும் அரசு முறை (system) எத்தனை மோசமானதாக இருந்தாலும் அதற்குள் நின்று இயங்கி எதிர்த்துப் போராடி மக்களுக்கு நன்மை செய்வது என்ற ஓர் அரசியலை அது முன் வைக்கிறது. இதனை இயக்குனர் தமிழ் அவரது குருநாதர் திரு வெற்றிமாறனிடம் (அசுரன் திரைப்படம்) இருந்து கற்றுக் கொண்டிருப்பார் என நினைக்கிறேன். இறுதிக் காட்சியில் அறிவு (கதாநாயகன்) எடுக்கும் முடிவு இதனை உணர்த்துகிறது. "இல்லை! இந்த சிஸ்டத்திற்குள் நாம் விரும்பும் எதையும் செய்ய இயலாது! இதை விட்டு வெளியேறிவிட வேண்டும்" என்ற முடிவை அறிவு எடுப்பதாக காட்சி அமைக்கப்பட வில்லை.
ஒரு ஜாதிய வர்க்க சமூகத்தில் நிலவும் அரசு நிர்வாகத்திற்குள் அனைத்து சமூகப் பிரிவினருக்கும் உரிய பங்கும் மரியாதையும் கிடைக்க வேண்டும், அதேபோல தன்னை நாடி வரும் எளிய மக்களுக்கு அரசு நிர்வாகம் பாரபட்சம் இன்றி நீதி வழங்க வேண்டும் என்பது திராவிட இயக்கம் முன் வைத்த சமூக நீதி அரசியலாகும்.

அதையே டாணாக்காரன் திரைப்படம் வலியுறுத்துகிறது எனலாம். திரைப்படத்தில் கார்ல் மார்க்ஸ் புத்தகமும் அம்பேத்கர் படம் மற்றும் மேற்கோளும் பயன்படுத்தப் பட்டு பெரியார் அடையாளம் விடுபட்டுப் போயிருப்பினும் திரைப்படத்தின் கதை பெரியார் வழிவந்த திராவிட இயக்க (inclusive policy) அரசியலையே மிக அழுத்தமாகப் பேசுகிறது! எடுத்துக்காட்டாக ஜாதிய உணர்வுடன் அறிவை எதிராளியாகப் பார்த்து முறைத்துக்கொண்டும், ஈஸ்வரமூர்த்தியின் கையாளாகவும் செயல்பட்டு துரோகம் செய்யும் சக காவலரை கலவரத்தின் போது தாக்குதலில் இருந்து அறிவு காப்பாற்றும் காட்சி.

இந்தக் காட்சி ஒரே ரத்தம் திரைப்படத்தில் கலைஞர் படைத்துக்காட்டிய சகோதரத்துவ உணர்வை நினைவூட்டுவதுடன் டாணாக்காரன் திரைப்படத்தினை தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும் கொண்டாடுவதற்கான காரணமாகவும் அமைகிறது.

கடைக்கோடி இராமேஸ்வரம் தீவில் புதியதடம் எனும் ஓர் சிற்றிதழில் எனது ஓர் இளைய சகோதரனாக தனது இலக்கியப் பயணத்தைத் துவங்கிய தமிழரசன் இன்று வலிமையான மக்கள் ஊடகமான சினிமாவின் மூலம் தனது கலை வழி அரசியலை முன் வைத்து அனைவரது கவனத்தையும், அனைத்துத் தரப்பினரின் வரவேற்பையும், பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.
இதையெல்லாம் பெற்றுத் தந்தது அவரது சமூக அக்கறையும், பாதிக்கப்படும் எளிய மக்கள் மீதான பற்றும், சனநாயக உணர்வும், அவரது விடாப்பிடியான கடின உழைப்பும் தான். இதனை அவர் மறக்காதவரை அவருக்குத் தோல்வி இல்லை!

வாழ்த்துகளும் பாராட்டுதல்களும் தமிழ்! □

# korona informasjon



TELEFON OG CHAT: Kommunens kundesenter Innbyggerservice svarer deg både på telefon og chat. Bilde: Ann-Kristin Loodtz

## Tilrettelegging for å ta vaksine

Er du ufør og ikke klarer å møte på vaksinestasjonen på egen hånd, kontakt vaksinestasjonen for få hjelp. Ring 408 177 41 hverdager mellom klokken 09.00 og 15.00, eller
send e-post på koronavaksine@bergen.kommune.no.
Vi ber om at du ikke sender sensitive opplysninger i e-post.

Koronatelefon Bergen 55 56 77 00
Mandag–fredag 08.00–20.45
Lørdag–søndag 09.00–14.45

Nye åpningstider fra og med 1. mai:
Mandag–fredag: 08.15–15.15
Helg og helligdager: stengt

Koronatelefonen svarer på generelle spørsmål om vaksine, koronavirus, testing, karantene, reiseråd og hygieneråd. Den er ikke en del av kommunens helsetjeneste. Har du spørsmål knyttet til din eller andres helseforhold, må du kontakte fastlegen. For akutt helsehjelp: Kontakt legevakten 116 117 eller medisinsk nødtelefon 113.

Nasjonal koronatelefon 815 55 015 - også på flere språk
Svarer på spørsmål om nasjonale regler og koronasituasjonen generelt.
Åpen mandag–fredag 08.00–15.30 (les mer på HelseNorge.no)

Skjema for spørsmål knyttet til koronasituasjonen
Se nasjonale nettsider for nasjonale regler. For andre ting: Om du ikke finner svar på nettsidene våre, og ikke kan løse det på chat eller telefon, kan du sende oss en direkte henvendelse. Bruk dette kontaktskjemaet.

Innbyggerservice 55 56 55 56 og chat
Telefon: mandag–fredag 08.00–15.30.
Chat: mandag–fredag 08.00–15.30 (rød knapp nederst til høyre under)
Kundesenter: mandag–fredag 08.00–15.00.

Svarer på spørsmål om smittevernregler og tjenestene til kommunen, samt endringer knyttet til koronasituasjonen.

Smittesporing 53 00 55 05
Mandag–fredag 09.00–14.00
Stengt i helger og på helligdager

*பேர்கன் வாழ் அன்பு உறவுகளே!*
*யாழ் மாநகர முதல்வர் (Ordfører) மணிவண்ணன், நல்லூர் பிரதேசசபை தலைவர் மயூரன் மற்றும் மாநகரசபை உறுப்பினர் பார்த்திபன் ஆகியோர் பேர்கன் நகருக்கு வருகை தரவுள்ளனர். அவர்களை பேர்கன் வாழ் தமிழர்கள் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதன. முக்கியமாக எமது மண்ணின் அபிவிருத்தி தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்படும்.*
*அனைத்து தமிழ் உறவுகளையும் அன்புடன் அழைத்து நிற்கிறோம்.*
*இடம்: புனித பவுல் பாடசாலை* Auditoriyam
*நாள்: 06.05.2022 வெள்ளிக்கிழமை*

*நேரம்: 18.00 மணிக்கு*
*ஒழுங்குகள்: தமிழ் சங்கம் பேர்கன்*

**Tamilenes forening i Bergen og Hordaland. Org. nr.: 996309126**




Kjære venner,

Jaffna-ordfører Manivannan, Nallur Pradeshiya Sabha-formann Mayuran og kommunestyreleder Parthiban skal etter planen besøke Bergen.

---

Møte med tamiler bosatt i Bergen og Hordaland.

Samtalen vil hovedsakelig bli utvekslet om utviklingen i Jaffna.
Vi inviterer hjertelig alle tamilske venner.

Tid: Fredag 6 Mai, Kl 18:00

Sted: St Paul skole auditorium

---

Møte med Bergen tamilsk helsepersonell.

Tid: Lørdag 7 Mai, Kl 12.00

Sted: Aurdalslia skole

https://maps.app.goo.gl/eqXGLLFtXEE6YsE76

Takk og vennlig hilsen,


Tamilenes forening i Bergen og Hordaland





Tady (5år)



Fargelagtav Sander (5år)





Adelen (5år)